இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 07-03-2025

# தென்னிந்தியாவுக்கே முதல்வர்

தமிழ்நாடு முதலமைச்சர் - மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று தென்னிந்தியாவுக்கே ஒட்டுமொத்த முதலமைச்சராக உயர்ந்து நிற்கிறார்கள். தொகுதி மறுசீரமைப்பு - மும்மொழித் திட்டம் ஆகியவை குறித்து முதலமைச்சர் முன்னெடுக்கும் முழக்கங்கள் தமிழ்நாட்டைத் தாண்டி பல்வேறு மாநில மக்களிடமும் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

தொகுதி மறுவரையறையால் தென் இந்தியாவிற்கு முன்கூட்டியே ஏற்படும் அபாயத்தை சுட்டிக்காட்டும் வகையில் அதனை எதிர்த்து 2024ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரால் ஒன்றிய பா.ஜ.க. அரசு இழைக்க நினைக்கும் அநீதிக்கு எதிராக முதல் குரலை மாண்புமிகு முதலமைச்சர் எழுப்பினார்கள். இது தொடர்பாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் இணைத்து ஆலோசனைக் கூட்டத்தை முதலமைச்சர் அவர்கள் நடத்தினார்கள். 63 அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது. 58 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இதில் ஒருமித்த உணர்வோடு இருக்கிறது என்பதை உணர்த்திக் காட்டிவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**“தொகுதி மறுசீரமைப்பு எனும் கத்தி தென்னிந்தியாவின் தலைக்கு மேல் தொங்கிக்கொண்டு இருக்கிறது. இதனால், தமிழ்நாடு கடுமையாக பாதிக்கப்பட இருக்கிறது. எனவே, இந்தச் சதியை நாம் அனைவரும் சேர்ந்து முறியடித்தாக வேண்டும். மக்கள் தொகை அடிப்படையில், மக்களவை - மாநிலங்களவை மற்றும் சட்டமன்றப் பேரவைகளின் இடங்கள் குறையும் என்று சொல்வது, “மக்கள் தொகை கட்டுப்பாடு” எனும் கொள்கையை, முனைப்பாக செயல்படுத்தி, நாட்டு வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ள தென் மாநிலங்களுக்கு தரப்படும் தண்டனையாகதான் அமையும். இந்திய நாட்டின் கூட்டாட்சி அமைப்புக்கும் தென் மாநிலங்களின் அரசியல் உரிமைக்கும் இது அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. இது, இந்திய ஜனநாயகத்தில் தமிழ்நாட்டுக்கு கிடைக்கும் அரசியல் பிரதிநிதித்துவ உரிமைமீதான நேரடி தாக்குதல். இப்படியொரு சம நீதியற்ற அநீதியான தொகுதி மறுசீரமைப்பு செயல்படுத்தப்பட்டால், இந்திய அரசியலில் தமிழ்நாட்டின் குரல் நெரிக்கப்படும்”** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இது தமிழ்நாட்டுக்கான குரல் மட்டுமல்ல, தென் மாநிலங்கள் அனைத்துக்குமான குரல் ஆகும்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் தமிழ்நாட்டுக்கான தீர்மானமாக மட்டுமல்லாமல்; தென் மாநிலங்கள் அனைத்துக்குமான தீர்மானமாக அமைந்துள்ளது.

★ இந்திய நாட்டின் கூட்டாட்சி அமைப்பிற்கும், தமிழ்நாடு மற்றும் தென்னிந்திய மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவ உரிமைக்கும் மிகப்பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய - மக்கள் தொகை அடிப்படையிலான நாடாளுமன்றத் தொகுதி மறு சீரமைப்பை இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒருமனதாகக் கடுமையாக எதிர்க்கிறது.

★ நாட்டின் நலனுக்காக மக்கள் தொகை கட்டுப்பாட்டை முனைப்பாகச் செயல்படுத்திய ஒரே காரணத்திற்காக, தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைக்கப்படுவது முற்றிலும் நியாயமற்றது.

★ மக்கள் தொகை கட்டுப்பாட்டை அனைத்து மாநிலங்களும் முன்னெடுப்பதை ஊக்குவிக்கும் வகையில், 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையிலேயே நாடாளு மன்றத் தொகுதிகள் தொடர்ந்து வரையறுக்கப்படும் என்று கடந்த 2000-ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் அவர்கள் உறுதி அளித்தவாறே, தற்போதும் இந்த வரையறை 2026-இல் இருந்து மேலும் 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் நாடாளுமன்றத்தில் உறுதி அளிக்க வேண்டும். மேலும், அரசமைப்பு சட்டத்தில் அதற்குரிய சட்டத் திருத்தமும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

★ நாடாளுமன்றத்தில் தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படும் பட்சத்தில், “1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தற்பொழுது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மாநிலங்களுக்கிடையே எந்த விகிதத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை உள்ளனவோ, அதே விகிதத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்குத் தேவையான அரசியல் சட்டத்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும்.

★ தொகுதி மறுசீரமைப்பின் காரணமாக, நாடாளு மன்றத்தில் தமிழ்நாட்டின் தற்போதைய பிரதிநிதித்துவ சதவீதமான 7.18 என்பதை எக்காரணம் கொண்டும் ஒன்றிய அரசு மாற்றம் செய்யக் கூடாது - என்று இக்கூட்டம் வலியுறுத்தி இருக்கிறது. இத்தோடு முடிந்திருந்தால் இது ஒரு பொதுவான ஆலோசனைக் கூட்டமாக முடிவு பெற்றிருக்கும். இதனைத் தொடர்ந்து செய்ய வேண்டிய செயலானது, தமிழ்நாட்டைத் தாண்டி தென்னிந்தியாவுக்கானதாக மாற்றி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

இக்கோரிக்கைகளையும், அவை சார்ந்த போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், மக்கள் மத்தியில் இப்பிரச்சினை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய “கூட்டு நடவடிக்கைக் குழு” ஒன்றை அமைத்திடவும், அதற்கான முறையான அழைப்பை மேற்படி கட்சிகளுக்கு அனுப்பி வைக்கவும் இக்கூட்டம் தீர்மானித்துள்ளது.

தென்னிந்திய மாநில முதலமைச்சர்களை ஒருங்கிணைத்து, தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களின் உரிமை பறிப்பிற்கு எதிரான போராட்டத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கி நடத்த வேண்டும் என அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். இதன் மூலமாக தென்னிந்தியாவுக்கே முன்னோடி முதலமைச்சராக அடையாளம் காணப்பட்டுள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

இந்தி பேசும் நான்கைந்து மாநிலங்களில் அரசியல் செய்தால் போதும், பிற மாநிலங்களை திரும்பி பார்க்கக் கூடத் தேவையில்லை, ஒட்டுமொத்த இந்தியாவை தொடர்ந்து ஆண்டு கொண்டே இருக்கலாம் என்கிற பா.ஜ.க.வின் சதி எண்ணத்தைத் தான் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள 888 இருக்கை வசதிகள் சுட்டிக்காட்டுகின்றன. 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இந்தி பேசும் 10 மாநிலங்களில் உள்ள 225 இடங்களில் 80 சதவீத இடங்களை அதாவது 178 தொகுதிகளை பா.ஜ.க. பெற்றது. தொகுதி மறுவரையறை செய்த பின் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த 10 மாநிலங்களில் 80 சதவீத வெற்றியை பா.ஜ.க. வெற்றி பெற்றாலே ஒன்றியத்தில் தனித்து ஆட்சி அமைத்துவிடும். மற்ற 26 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மக்கள் 100 சதவீத தோல்வியை பா.ஜ.க.விற்கு அளித்தால்கூட இந்திய ஒன்றியத்தை ஆள்வது பா.ஜ.க.வாகத்தான் இருக்கும். எனவே தான் இந்த தொகுதி மறுவரையறைச் செய்யத் துடிக்கிறார்கள்.

**இந்த அரசியல் ஆபத்தை தென்னிந்தியாவுக்கு உணர்த்தி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இவை எல்லாம் அரசியல் களத்தில் - பொதுவெளியில் அம்பலம் ஆகி வருகிறதே என்பதால்தான் மாண்புமிகு முதலமைச்சர் மீது பாய்கிறது பா.ஜ.க.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.3.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் சிறந்த இதழியலாளருக்கான 2023–ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதுகளை நக்கீரன் கோபால் அவர்களுக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு பெண்மையைப் போற்றும் வகையில் சிறப்பினமாக திருமதி சுகிதா சாரங்கராஜ் அவர்களுக்கும் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நக்கீரன் இரா.கோபால் – திருமதி சுகிதா சாரங்கராஜிக்கு

# 2023-ஆம் ஆண்டிற்கான ‘கலைஞர் எழுதுகோல்’ விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 7-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2023-ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதுகளை நக்கீரன் இரா.கோபால் மற்றும் திருமதி சுகிதா சாரங்கராஜ் ஆகிய இருவருக்கும் வழங்கி சிறப்பித்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.3.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் சிறந்த இதழியலாளருக்கான 2023-ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதுகளை நக்கீரன் இரா. கோபால் அவர்களுக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு பெண்மையைப் போற்றும் வகையில் சிறப்பினமாக திருமதி சுகிதா சாரங்கராஜ் அவர்களுக்கும் வழங்கி சிறப்பித்தார்.

இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றி வரும் சிறந்த இதழியலாளர் ஒருவருக்கு ஆண்டு தோறும் ‘கலைஞர் எழுதுகோல் விருது’ மற்றும் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் என்று 2021-22ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், கடந்த 2021-ஆம் ஆண்டிற்கான ‘கலைஞர் எழுதுகோல் விருது’ மூத்த பத்திரிகையாளர் ஐ.சண்முகநாதன் அவர்களுக்கும், 2022-ஆம் ஆண்டிற்கான ‘கலைஞர் எழுதுகோல் விருது’ மூத்த பத்திரிகையாளர் வி.என்.சாமி அவர்களுக்கும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

அந்த வகையில் 2023-ஆம் ஆண்டிற்கான ‘கலைஞர் எழுதுகோல் விருது’, நக்கீரன் எனும் பெயரில் புலனாய்வு இதழினைத் தொடங்கி பல ஆண்டுகளாகப் பல்வேறு பாராட்டுகளைப் பெற்று வெற்றிகரமாக இதழினை நடத்திவரும் நக்கீரன் இரா.கோபால் அவர்களுக்கு வழங்கிடவும்;

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பெண்மையைப் போற்றும் வகையில் சிறப்பினமாகப், பல்வேறு தொலைக்காட்சி நிறுவனங்களில் 18 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி நிறைந்த அனுபவம் பெற்றுள்ள திருமதி சுகிதா சாரங்கராஜ் அவர்களுக்கு வழங்கிடவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டு, நக்கீரன் இரா.கோபால் மற்றும் திருமதி சுகிதா சாரங்கராஜ் ஆகியோருக்கு நேற்று கலைஞர் எழுதுகோல் விருதுகளையும், தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் கூடிய பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 6 கலைஞர்களுக்கு ‘கலைச்செம்மல்’ விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 7 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மரபுவழி ஓவியம், நவீன பாணி ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் திறமைமிக்க 6 கலைஞர்களுக்கு “கலைச் செம்மல் விருது” வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.3.2025) தலைமைச் செயலகத்தில், கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் மரபுவழி ஓவியம், நவீன பாணி ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் திறமைமிக்க 6 கலைஞர்களுக்கு 2024-2025ஆம் ஆண்டிற்கான ‘கலைச்செம்மல்’ விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் மரபுவழி ஓவியம், நவீன பாணி ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் திறமைமிக்க கலைஞர்களுக்கு ‘கலைச்செம்மல்’ விருது வழங்கி ஊக்குவித்து வருகிறது. இவ்விருதுடன், விருதாளர்களுக்கு செப்புப் பட்டயம், ஒரு இலட்சம் ரூபாய் விருதுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவை வழங்கி கௌரவிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் 6 புகழ்பெற்ற கலைஞர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

அதன்படி, 2024-2025 ஆம் ஆண்டிற்கான ‘கலைச்செம்மல்’ விருதிற்கு மரபுவழி ஓவியப் பிரிவில் ஆ.மணிவேலு, மரபுவழி சிற்ப பிரிவில் வே.பாலச்சந்தர் மற்றும் கோ.கன்னியப்பன், நவீனபாணி ஓவியப் பிரிவில் கி.முரளிதரன் மற்றும் அ.செல்வராஜ், நவீனபாணி சிற்ப பிரிவில் நா.ராகவன், ஆகிய 6 கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு, அக்கலைஞர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று ‘கலைச்செம்மல்’ விருதுகளையும், விருதிற்கான செப்புப் பட்டயம், ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்வின் போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன் மற்றும் கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (மு.கூ.பொ.) திருமதி.கவிதா ராமு ஆகியோர் உடனிருந்தனர்.

### திண்டுக்கல் மாவட்டம், மங்களப்புள்ளியில் - 100 ஆண்டுகளுக்குப் பிறகு

# இலட்சுமி நரசிங்கப் பெருமாள் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு!

## மார்ச் 9—ந் தேதியன்று நடைபெறுகிறது!

*திண்டுக்கல், மார்ச் 7 -*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுரையின்படி, திண்டுக்கல் மாவட்டம், மங்களப் புள்ளி, இலட்சுமி நரசிங்கப் பெருமாள்திருக்கோயிலுக்கு 100 ஆண்டுகளுக்கு பிறகு வருகின்ற 09.03.2025 அன்று திருக்குடமுழுக்கு ஆன்மிகப் பெரியோர்கள் மற்றும் இறையன்பர்கள் பங்கேற்புடன் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ஆகம விதிகளின்படி குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் முடிவுற்றபின், திருப்பணிகள் மேற்கொள்ளப்படாத திருக்கோயில்களை கண்டறிந்து குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.*

*திண்டுக்கல் மாவட்டம், மங்களப்புள்ளியில் அமைந்துள்ள இலட்சுமி நரசிங்கப் பெருமாள் திருக்கோயிலுக்கு 100 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்ற நிலையில் மீண்டும் குடமுழுக்கு நடத்திட தொல்லியல் துறை ஆலோசகரால் கருத்துரு பெறப்பட்டு ரூ.146.80 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.*

*இத்திருக்கோயிலுக்கு பெருமாள் மற்றும் தயார் சன்னதி கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், திரும்ப கட்டுதல் பணிகளும், நுழைவு வாயில் கட்டும் பணிகளும், சுற்றுசுவர் கட்டும் பணியும், கருங்கல் தரைத்தளம் அமைக்கும் பணியும், மடப்பள்ளி கட்டும் பணியும், கழிவறை மற்றும் தண்ணீர் வசதியும், பின்புறம் சுற்றுச்சுவர் கட்டும் பணியும் என மொத்தம் ரூ.146.80 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுமார் 100 ஆண்டுகளுக்கு பிறகு 09.03.2025 அன்று இலட்சுமி நரசிங்கப்பெருமாள் திருக்கோயிலுக்கு திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா இறையன்பர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடன் வெகுவிமரிசையாக நடைபெற உள்ளது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இன்று வரை 2,639 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளன. 9.3.2025 அன்று மட்டும் சென்னை, ஆலந்தூர், சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், விருதுநகர் மாவட்டம், கல்லூரணி, வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில், ஈரோடு மாவட்டம், நெரிஞ்சிப்பேட்டை, மாரியம்மன் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், சாத்தனூர், லெட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயில், பாபநாசம், கைலாசநாதர் திருக்கோயில், திண்டுக்கல் மாவட்டம், மங்கப்பபுள்ளி, லெட்சுமி நரசிங்கப்பெருமாள் திருக்கோயில் உள்ளிட்ட 23திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற உள்ளது.*



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று (06/03/2025) வியாழக்கிழமை, சென்னை சேத்துப்பட்டில் உள்ள இந்திய உணவுக் கழக தெற்கு மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார். உடன், இந்திய உணவுக் கழக தெற்கு மண்டல நிர்வாக இயக்குநர் ஜெசிந்தா லாசரஸ், பத்மஸ்ரீ ஷைனி வில்சன், பொது மேலாளர் முத்துமாறன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.